30.01.2026

O.S.No. 194/2020

PW1– சண்முகத்தாய் – க/பெ. ராசையா

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 30.01.2026

<u>குறுக்கு விசாரணை :</u> ( 2, 4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில்)

1. வழக்கு சொத்து பூர்வீகமாய் பால்ராஜ், கருப்பசாமிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். கருப்பசாமிக்கு, பால்ராஜ் சித்தப்பா என்றால் சரிதான். 18.11.1996 ல் மேற்படி இருவரும் பாகப்பிரிவினை செய்துகொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினையில் கருப்பசாமிக்கு மேல்புறமும், பால்ராஜ்க்கு கீழ்புறம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி சொத்துக்கள் நத்தம் சர்வே எண்.418/2022 ல் உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

2. 13.12.2020 ல் கருப்பசாமியிடமிருந்து தென்பக்கம் உள்ள இடத்தை கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். 2006 ல் கருப்பசாமி மற்றும் தமிழ்செல்வத்திடமிருந்து வடப்பக்கம் உள்ள சொத்தை எனது மகன் சிவக்குமார் வாங்கினார் என்றால் சரிதான். கருப்பசாமியும், தமிழ்செல்வமும் சகோதரர்கள் என்றால் சரிதான். ஆனால் எனது பிராதில் கருப்பசாமியும், தமிழ்செல்வமும் தந்தை, மகன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

3. எனது மகன் 2010 ல் வீடுகட்டினாரா என்றால் வீடு கட்டி சுமார் 15 லிருந்து 18 ஆண்டுகள் இருக்கும். எனது மகன் வீடுகட்டும்போது பிரதிவாதிகள் வடபகுதிசுவரில் ஜன்னல், சிலாப் வைக்கக்கூடாது என

இடைஞ்சல் செய்தார்கள் என்றால் சரிதான். அது அவர்களதுஇடம் என சொல்லி இடைஞ்சல் செய்ததால்தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். வடபக்கத்தில் 30, 40 ஆண்டுகளாக பிரதிவாதிகள் வீடுகட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

4. நான் வாங்கியுள்ள தென்பகுதிஇடம் காலியிடமாக தான் இருந்தது என்றால் சரிதான். கருப்பசாமி பிராது தபசில் சொத்து இருக்கும் இடத்தில் குடியிருக்கவில்லை, காலனியில் குடியிருந்து வந்தார் என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கியஇடத்தின் தென்பகுதி என் கணவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான், அதனால்தான் இந்த சொத்து கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான்.

5. 20.07.2020 ம் தேதி வழக்கு 2 ம் தொகுப்புரை சொத்தில் கீழோரம் 1,2 பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம்(கழிப்பறை) கட்டியுள்ளதாக நான் வழக்கில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். கழிப்பறை கட்டியது தொடர்பாக காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி கழிப்பறை ஊர்மேலழகியான் பஞ்சாயத்தில் இருந்து இலவச கழிப்பறை திட்டத்தின் கீழ் 2017, மார்ச் மாதம் கட்டப்பட்டது என்றால் சரிதான். கழிப்பறை கதவில் மேற்படி கட்டிடம் கட்டப்பட்டது தொடர்பாக எழுதப்பட்டது என்றால் சரிதான். 2017 ல் கழிப்பறை கட்டும்போது நான் எந்தவித ஆட்சேபனையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட இடத்தில்தான் கழிவறை கட்டியுள்ளார்கள் என்றால் சரியல்ல.

6. நான் 1996 பாகபிரிவினை ஆவண தபசில் சொத்துக்களுக்கு விரோதமாக அளவுகளை வைத்து கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. காலம் காலமாக 2, 4 முதல் 6 பிரதிவாதிகள்தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் தற்போது கழிவறையை இடிக்கவேண்டும் என கோரியுள்ள பரிகாரம் காலவரையறை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக 20.07.2020 தேதியில் ஆக்கிரமிப்பு செய்து கழிவறை கட்டியுள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது இடத்திற்கு வடபகுதியில் உள்ள பிரதிவாதி சொத்தின் மேல்பக்கத்தில் 2ம் பிரதிவாதி 2015ம் ஆண்டு வீடுகட்டினார் என்றால் எனக்கு வருடம் தெரியாது, ஆனால் வீடு கட்டியுள்ளார். சுமார் 5,6 ஆண்டு கழித்து அவர் கட்டியுள்ளார். அவர்கள் அனுபவம் செய்துவரும் 2ம் தபசில் சொத்தில் சந்து அமைத்து அனுபவம் செய்துவருகிறார் என்றால் சரியல்ல. நான் வடக்குச்சுவரில் 1 ½ சிலாப் கட்டியுள்ளேன் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி எனது சிலாப்பிலிருந்து இடம் விட்டுதான் கட்டியுள்ளார் என்றால் எனதுஇடத்தில்தான் கட்டியுள்ளார். சிலாப்பிற்கும், சுவருக்கும் இடையே இடம் உள்ளது என்றால் அது எனக்கு பாத்தியப்பட்ட இடம். நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி